2 பக்கங்கள் 15 காசுகள்

பதிவு எண் எம். 8798

அமைச்சர்கள் நலன் காணும் விதம்

மகாராஷ்டிர மாநில அமைச்சரவையில் புதிதாக 10 அமைச்சர்கள் சேர்த்து விரிவாக்கப்பட்டிருப்பதால் கூடுதலாக 25 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படும்.

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' டிச. 6

தீக்கதிர்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி [மார்க்சிஸ்ட்] நாளிதழ்

கதிர் 12 மதுரை 2—1—75 வியாழன் மலர்: 305

"சுதந்திர" இந்தியாவில் குழந்தைகளின் நலன் பேணும் விதம்

குழந்தைபோஷாக்குத் திட்டத்தின்படி 1972-73ம் ஆண்டில் பலனடைந்த குழந்தைகளின் எண்ணிக்கை 50 லட்சம். 1973-74ம் ஆண்டில் அவர்களின் எண்ணிக்கை 37 லட்சமாக குறைந்து விட்டது.

"இந்துஸ்தான் டைம்ஸ்' டிச. 13

ஊதிய முடக்கத்தை ரத்து செய்! அரசு ஊழியர்களின் பஞ்சப்படி பாக்கிகளை வழங்கு!

ரயில்வே ஊழியர்களைப் பழிவாங்காதே! ஆள்தூக்கி அவசரச்சட்டம் ஒழிக!

தொழிலாளர்களின் போர்க்கொடி உயருகிறது

தொழிற்சங்கங்களின் அகில இந்திய ஐக்கியக் கவுன்சில் அறைகூவல்

புதுடெல்லி, டிச. 31—

1974 டிசம்பர் 21, 22 ஆகிய தேதிகளில் தொழிற்சங்கங்களின் அகில இந்தியஅமைப்புகளின் ஐக்கியக் கவுன்சில் புதுடெல்லியில் கூடியது. அகில இந்திய ரீதியில் தொழிலாளி வர்க்கத்தை பாதிக்கும் அதிமுக்கியமான பிரச்சினைகள் மீது நான்கு தீர்மானங்களை அக்கவுன்சில் நிறைவேற்றியது. அவற்றை கீழே பிரசுரித்துள்ளோம்.

பஞ்சப்படியில் பாதியையும், சம்பள அதிகரிப்பிலும் போனசிலும் முழுவதையும் முடக்கியுள்ள சட்டத்தை எதிர்த்து எல்லா மாநிலங்களிலுமுள்ள தொழிலாளி வர்க்கம தனது ஆட்சேபணையை உறுதியாக எழுப்பியுள்ளதை யு சி டி யு வின் (தொழிற் சங்கங்களின் அகில இந்திய ஐக்கியக் கவுன்சிலின்) பொதுக் குழு வரவேற்கிறது.

ஊதிய முடக்கத்திற்கு எதிர்ப்பு

மாநில ரீதியாகவோ, பிரதேச ரீதியாகவோ, சில இடங்களில் மாவட்ட ரீதியாகவோ, மாநாடுகளும் நடந்தேறியுள்ளன. கேரளம், மஹாராஷ்டிரம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மாநிலந் தழுவிய முறையில் ஒரு நாள் எதிர்ப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. பொதுக் கூட்டங்கள், "தர்ணா'க்கள், மற்றும் இதர வழி வகைகளில் நாடெங்கிலுமுள்ள தொழிலாளிகள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆயினும், தொழிற் சங்க இயக்கத்தின் ஏகோபித்த எதிர்ப்பைப் பற்றி இந்திய அரசாங்கம் கவலை காட்டாமல் கல்லுப் பிள்ளையாராக இருக்கிறது. மாறாக, பஞ்சப்படிக்கே உச்சவரம்பு விதிக்கும் முயற்சிகள் நடக்கின்றன. இது குறித்து சில பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகங்கள் சில சிபாரிசுகளை அரசாங்கத்திற்கு அனுப்பியுள்ளன. விலைவாசிக்கேற்ப மாற்றப்பட வேண்டிய பஞ்சப்படிக்கு உச்சவரம்பு போடும் நடவடிக்கையை எதிர்த்து அணுசக்தி இலாகாவின் மந்திரி சபையின் கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனமான "இண்டியன் ரேர் எர்தஸ் லிமிடெட்" என்ற தொழிற்சாலையில் 90 நாட்களுக்கு மேலாக வேலை நிறுத்தம் நடந்து வருகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியப் போராட்டங்கள் சர்க்காரின் கொள்கைகளை முறியடித்தாலொழிய மேலும் ஏற்படும் விலைவாசி உயர்வுக்கு பஞ்சப்படி தராமல் ஊதிய வெட்டைத் தொழிலாளிகள் மீது திணிக்கும் அபாயம் நிச்சயம் உண்டு என்று யு சி டி யு தொழிலாளி வர்க்கத்தை எச்சரிக்கிறது.

இங்கு சட்டத்தை எதிர்த்து நடத்திய ஐக்கியப் போராட்டங்களுக்காக நாட்டிலுள்ள தொழிலாளிகள் அனைவரையும் வாழ்த்தும் அதே சமயத்தில் நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தும்படியும் ஒருஅகில இந்தியவேலை நிறுத்தத்திற்குத் தயாராகும்படியும் யு சி டி யு வேண்டிக் கொள்கிறது.

மத்திய, மாநில சர்க்கார் சிப்பந்திகளது பஞ்சப்படி பிரச்சினை

மத்திய சர்க்கார் சிப்பந்திகளின் தவணை பஞ்சப்படி பாக்கிகளையும் மாநில சர்க்காரின் 8 தவணை பஞ்சப்படி பாக்கிகளையும் கொடுக்காமல் பிடித்து வைத்திருப்பதை யூ சி டி யூவின் பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. உபயோகப் பொருட்களின் விலைகளெல்லாம் என்றுமிராத அளவுக்கு உயர்ந்திருக்கும்போது பஞ்சப்படியை கொடுக்காமலிருப்பது தொழிலாளிகளின் ஊதியத்தையே கடுமையாக வெட்டுவதாகும்.

ஒன்றுபட்டு நின்று, வாழ்க்கைத் தரத்தின் மீது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதலை எதிர்த்து ஐக்கிய வெகுஜன போராட்டங்களை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய, மாநில அரசு ஊழியர்களை பொதுக்குழு கேட்டுக் கொள்ளுகிறது.

மத்திய, மாநில சர்க்கார் ஊழியர்கள் மீது, சர்க்கார் தொடுத்துள்ள இந்தப் படுமோசமான தாக்குதலை முறியடிக்காமலிருந்துவிட்டால் இதைத் தொடர்ந்து தொழிலாளர்களின் சம்பளத்தையும், பஞ்சப்படியையும் இதே மாதிரி வெட்டுவதற்கு சர்க்காருக்கு துணிச்சல் ஏற்படுமென்று தொழிலாளி வர்க்கத்தை யூ சி டி யூ பொதுக் குழு எச்சரிக்கிறது. எனவே அனைத்துத் தொழிற்சங்க இயக்கங்களும் திரண்டெழுந்து தொழிலாளி வர்க்கம் முழுவதையும் மத்திய, மாநில அரசு ஊழியர்களின் நியாயமான போராட்டத்திற்காதரவாக போராட முன்வர வேண்டுமென்று கோருகிறது.

ரயில்வே தொழிலாளிகள் பழிவாங்கப்படுதல்

22000 ரெயில்வே தொழிலாளிகளுக்கு, கடந்த வேலை நிறுத்தத்திற்குப் பிறகு இன்னும் வேலையளிக்கப்படவில்லை. அரசாங்கத்தின் காட்டுமிராண்டித்தனமான இந்தப் பழிவாங்குதலை பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. மூன்று உயர்நீதிமன்றங்கள் சர்க்காரின் போக்கைக்கண்டித்துத் தொழிலாளிகளை வேலைக்கமர்த்திக் கொள்ளும்படி உத்தரவு போட்டும் கூட, அரசாங்கம் அந்தத்தீர்ப்புகளை ஏற்று அமுல் நடத்துவதற்கு பதிலாக அவற்றை எதிர்த்து அப்பீல் செய்திருக்கிறது.

உலக முழுவதும் தன்னுடைய அநாகரீகமான தன்மை அம்பலப்பட்டு விடுமென்று பயந்து, அரசாங்கமானது, இவ்வாறு ஏராளமானவர்கள் பழிவாங்கப்பட்டுள்ளதைப் பரிசீலிக்க சர்வதேச போக்குவரத்து பெடரேஷன் நியமித்துள்ள கமிட்டி தன் பரிசீலனையை நடத்த எந்த உதவியையும் செய்ய மறுத்துள்ளது.

இந்திய அரசாங்கத்தின் தணிக்கை, வருமானவரி, தபால்-தந்தி உட்பட மற்றுமிதர இலாகாக்களிலும் இம்மாதிரியாகப் பழிவாங்குவது நீடிக்கிறது. பல மாநில அரசாங்கங்களும் மத்திய அரசாங்கத்தைப் பின்பற்றிஇதே மாதிரி பழிவாங்கலில் இறங்கியுள்ளன.

இந்தப் பழிவாங்குதலெல்லாம் தற்செயலானதல்ல, நாட்டிலேற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அரசாங்கத்தின் கொள்கைகளின் விளைவேயாகும், இந்த நெருக்கடியின் சுமையைத் தொழிலாளிகள் தலையில் சுமத்தவே அரசாங்கம் முயற்சிக்கிறது, அரசாங்கத்தின் இத்தகைய கொள்கைகளையும் தொழிலாளிகளை தாக்குவதையும் எதிர்த்துப் போராட்டங்கள்வெடித்த வண்ணமிருக்கின்றன.இதை கண்டு அரசாங்கம் அஞ்சுகிறது. எனவே தான் தொழிலாளி வர்க்கத்தை பயமுறுத்தவும் தனது தொழிலாளிவர்க்க—விரோதக் கொள்கைகளை நீடித்து கையாளவும் அரசாங்கம் முனைந்து பழிவாங்குதல்களை மேற்கொள்ளுகிறது.

பழிவாங்குதலை எதிர்த்து 'சஸ்பெண்டு'செய்யப்பட்டவர்கள், 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டவர்கள் அனைவரையும் வேலைக்கெடுத்துக் கொள்ளக்கோரியும். மத்திய—மாநில அரசு ஊழியர்கள் நடத்தும் போராட்டத்தை பொதுக்குழு மனப்பூர்வமாய் ஆதரிக்கிறது. அதே சமயத்தில் தொழிலாளிவர்க்கமனைத்தும் அவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதலாகவே அரசாங்கத்தின் பழிவாங்கும் நடவடிக்கைகளை உணர வேண்டுமென்று எச்சரிக்கிறது. எனவே மத்திய—மாநில அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாக தொழிற்சங்க இயக்கம் முழுவதும் தொழிலாளி வர்க்கத்தைத் திரட்ட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறது.

ஆள்தூக்கி சட்டங்கள் ஒழிக

அரசாங்கத்தின் தொழிலாளி வர்க்க—விரோதக் கொள்கைகளை எதிர்க்கும் முயற்சிகளை அடியோடு ஒடுக்குவதற்காக, தொழிலாளி வர்க்கத்தின் மீதும், ஏனைய உழைப்பாளி மக்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள அரசு அடக்குமுறையை யு சி டி யு கண்டிக்கிறது.

ஒவ்வொரு ஸ்ட்ரைக்கிலும் அதைத் தடைசெய்ய இந்திய பாதுகாப்புச் சட்ட விதிகள் பயன்படுத்தப்படுகின்றன. மேற்கு வங்கத்தில் தொழிலாளர்களுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய பஞ்சப்படி பாக்கிகளை மறுக்க இவ்விதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பங்களாதேஷ் சம்பந்தமாக, இந்தியா—பாகிஸ்தான் போர் நடந்த போது இந்த "இந்திய பாதுகாப்பு விதிகள்" வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை பாதுகாக்க பிரகடனப்படுத்தப்பட்டன. இப்போது அவ்விதிகள் உழைப்பாளி மக்கள் கடுமையாகச் சுரண்டப்படுவதைப் பாதுகாப்பதற்காக அமுலில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இதே மாதிரி, தொழிற்சங்க தலைவர்களையும், தீவிர ஊழியர்களையும், ஜனநாயக இயக்கங்களின் தலைவர்களையும தீவிர ஊழியர்களையும் விசாரணையின்றி சிறைப் படுத்தி வைக்க உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டமும் உபயோகிக்கப்படுகிறது.

'இந்தியப் பாதுகாப்புச் சட்ட விதிகள்', 'உள்நாட்டு பாதுகாப்புச் சட்டம்'' இவை போன்று விசாரணை பின்றி காவலில் வைக்க அனுமதியளிக்கும் இதர சட்டங்கள், இவையனைத்தையும் வாபஸ் பெறவேண்டுமென்றும், 'அவசரகால நிலைமை'ப பிரகடனத்தை ரத்துச்செய்ய வேண்டுமென்றும், யு சி டி யுவின் பொதுக்குழு வற்புறுத்துகிறது.

உணவுப் பிரச்சினை

தி. மு. க. அரசின் புதிய ஸ்டண்ட்

திருச்சி, டிச 30—

கம்பு, சோளம் போன்ற முரடடுத் தானியங்களை உபரி மாநிலங்களிலிருந்து பெருமளவில் வாங்கப்போவதாகவும் அதனை கூட்டுறவு ஏஜன்சிகள் மூலமாகவே வாங்கி அவைகள் மூலமே மக்களுக்கு விநியோகம் செய்யப் போவதாகவும் ஒரு ஸ்டண்ட் அடித்துள்ளது. தமிழக அரசு.

கடந்த அறுவடையிலேயே 2 லட்சம் டன் விளையும் என அரசாங்கமே அறிவித்தது. அதில் 3 லட்சம் டன் அரிசிதான் கொள்முதல் செய்யப்போவதாக அறிவித்தது. பின்பு இரண்டரை லட்சம் டன் அரிசிதான் கொள்முதல் குறி என்றது. பின்பு 2 லட்சம் குறிஎனகுறுகிக்கொண்டது.

அதையாவது உருப்படியாக செய்ததா என்றால் இல்லை.

அரைகுறையாக வாங்கிய கொள்முதல் கூட ஏழை விவசாயிகளை அதிகாரிகளைக் கொண்டு உருட்டிமிரட்டி வாங்கியதாகும்.

இப்படி நாளுக்கு ஒருநாள் ஒருபுதிய திட்டத்தை அறிவித்ததே யொழியே அரிசி விலை தானியவிலை குறைந்தபாடில்லை.

காரணம் 10 ஏக்கருக்கு மேல் உள்ளவர்களிடம் அவர்களுக்கு தேவை போக மீதி நெல்லை கொள்முதல் செய்ய தமிழக அரசு தயாராக இல்லை. நிலப்பிரபுக்களை நெருக்கிப்பிடிக்க கருணாநிதி அரசு ஏனோ அஞ்சுகிறது.

10ஏக்கருக்குமேல் உள்ளவர்களிடம் அவர்களது தேவைக்குப் போக மீதமுள்ளவற்றை கட்டாயக் கொள்முதல் செய்து இருக்குமானால் இன்று இந்தக் கொடுமையான விலைவாசி உயர்வு ஏற்பட்டிருக்காது. இன்று அன்னிய மாநிலங்களுக்கு காட்டுத் தானியங்களுக்கு காவடி எடுக்க வேண்டியிருக்காது.

மேலும் மாவட்ட கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டிகள் கர்நாடக ஆந்திர மாநிலங்களில் கம்பு சோளம் போன்ற காட்டுத் தானியங்கள் வாங்க மாநில அரசே உதவி செய்யுமாம்.

சி ஐ ஏ உளவு நீதிபதியையும் விட்டுவைக்கவில்லை

புதுடெல்லி. டிச 30—

சட்டத்திற்கு விரோதமாக உள்நாட்டுமக்களிடமே உளவு வேலைகளை நடத்தும் சி ஐ ஏ என்னும் உளவு சதிகாரக் கூட்டம் அந்நாட்டு சுப்ரீம் கோர்ட் நீதிபதியைக் கூட விட்டு வைக்கவில்லை

இதனை "டைம்" என்னும் பத்திரிகை கூறியுள்ளது.

சி ஐ ஏ உளவு ஸ்தாபனத்தால் உளவு வேலை பார்க்கப்பட்ட சுப்ரீம் கோர்ட் நீதிபதி டக்லாஸ் எனபவர் ஆவார். அவர் 1960 —1969-ம் ஆண்டுகளின் இடைக் காலத்தில் டொமினிகன் குடியரசுக்கு விஜயம் செய்து அதன் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டிருந்தாராம். அதன் காரணமாக சி ஐ ஏ அவர் மீது உளவு வேலை நடத்தியதாம்.

அதேபோல், தற்போது அமெரிக்காவின் பார்லிமெண்ட உறுப்பினர்களாக உள்ள இருவர் மீதும முன்னாள் செனட்டர் ஒருவர் மதும் சிஐஏ உளவு வேலைகளை நடத்தியதாகவும் "டைம" பத்திரிக்கை கூறியுள்ளது.

குளிருக்கு பலியான ஏழைகள் 163

பாட்னா, டிச. 30—

இன்றுவரை பீகார் மாநிலத்தில் குளிருக்கு இரையானோரின் எண்ணிக்கை 163 ஆகும்.

குளிரினால் இறந்தவர்கள் அனைவரும், குளிரிலிருந்து தங்கள் உடலைக் காப்பாற்றிக் கொள்ள தேவையான துணிகளை வாங்க முடியாதவர்களே யாவர்.

ஏழைகளையும் வீடு இல்லாதவர்களையும் குளிரிலிருந்து காப்பாற்ற தர்ம சத்திரங்கள் போன்றவைகளை அவர்களுக்கு குளிர் காலத்தில் கொடுக்குமாறு பிரசாத் என்ற நாவ்தா மாவட்ட மாஜிஸ்டிரேட் கேட்டுக் கொண்டுள்ளார்.

...ரான்சில் ...லாளித்துவ ...க்கடி

..., டிச. 30— ... நாடான ...ாரம் ...

டம் இம்மாதம் வரை 7 லட்சத்தை எட்டிப்பிடித்திருக்கும் எனத்தெரிகிறது. இப்போதுள்ள நெருக்கடி ...டிய சீக்கிரத்தில் சுமார் 5 லட்சம் பேரை வேலை நீக்கம செய்யும்.

பிரான்சின் கார்தொழில் கடும்பாதிப்பிற்குள்ளாகியுள்ளது,

புது வருடத்திலிருந்து ஏராளமான கார் தொழிலகளுக்கு மூடுவிழா நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

...ஏற்கனவே, பிரான்சி... ...இரண்டாவது ... தொழிற... ... 40 ...துவிட்...

வருடத்தில் மூன்றில் ஒரு பகுதி குறைந்துவிட்டது.

இவைகளின் தொடர்ச்சி...க 5 தொழிலாளர்களுக்கு ...வர் வீதம் உலோகத் ...லைகளில் வேலை ...ழந்துவிட்டுள்ளனர்...

இடைத்தேர்தலில் காங்கிரஸ் தோல்வி

போபால், டிச. 30—

மத்தியப்பிரதேசத்தில் நடைபெற்ற இடைத் தேர்தல் ஒன்றில காங்கிரஸ் கட்சி கோட்டை விட்டது. ஒரு சுயேட்சை வேட்பாளர் வெற்றி பெற்றார்.

போபால் நகரில் கோவிந்புரா தொகுதி காங்கிரஸ் எம் எல் ஏ இறந்து போனதால் இவ்விடைத் தேர்தல் நடைபெற்றது. பாபுலால்கார் என்னும் சுயேட்சை வேட்பாளர் சோஷலிஸ்ட் கட்சி, ஜனசங்கம், சிண்டிகேட் காங்கிரஸ் ஆகியகட்சிகளால் ஆதரிக்கப்பட்டார். வலது கம்யூனிஸ்ட் கட்சியால் காங்கிரஸ் வேட்பாளர் ரத்தன் குமார் என்பவர் ஆதரிக்கப் பட்டார். இறுதியில் சுயேட்சை வேட்பா... வெற்றி பெற்...

மீண்டும் தங்க விலை உயர்வு

பிரஸல்ஸ், டிச. 30—

என்றுமில்லாத அளவுக்கு ஐரோப்பிய மார்க்கெட்டு தங்கத்தின் விலை உயர்ந்துள்ளது. ஒரு அவுன்ஸ் தங்கம் 197 டாலராக(ரூ 1576)வரை உயர்ந்துள்ளது.

இதற்கு அடிப்படை காரணம் ஐரோப்பிய மார்க்கெட்களில் தங்கத்திற்கு மாற்று நாணயமாக கருதப்படும் டாலரின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைவதே.

டாலரின் வீழ்ச்சி காரணமாக அமெரிக்கா தனது தங்க இருப்புகளையெல்லாம் வெளியேற்றி விற்பனைக்காக மார்க்கெட்டுகளுக்கு கொண்டு வருகிறது. கடந்த 40 ஆண்டுகளில் இவ்வளவு தங்கத்தை அமெரிக்கா மார்க்கெட்டுக்கு இதுவரை கொண்டுவந்ததே இல்லை.

தபால்-தந்தி ஊழியர்கள் 'தர்ணா'

மதுரை, டிச 30—

இங்குள்ள தபால்-தந்தி ஊழியர்கள் கடந்த 27ந்தேதி தர்ணா போராட்டம் நடத்தினர்.

கீழமாசிவீதியில் உள்ள 'தொலைபேசி ஆட்டோ எக்சேஞ்ச்' முன்பு நடந்த இந்த தர்ணாவை இராசாமணி (ஆர் எம் எஸ்) துவக்கி வைத்தார்,

ஊதிய முடக்கத்தை எதிர்த்தும், நான்கு பஞ்சப்படி பாக்கிகளை வழங்கக் கோரியும், குறைந்தபட்ச ஊதியம் கோரியும் நடந்த இந்ததர்ணாவில் திரளான ஊழியர்கள கலந்து கொண்டு முழக்கம் எழுப்பினர்.

மாலையில் தர்ணாவைவங்கி ஊழியர் சங்கத் தலைவர் கோபால கிருஷ்ணன் முடித்து வைத்தார்.

தீக்கதிர்

ஆளும்கட்சி ஊழலை பூசி மெழுக எதிர்க் கட்சிகளை சாடுகிறார்

அரியானா மாநிலத்தில் ரோட்க் நகரில் கடந்த 30—12—74-ல் நடைபெற்றதோர் பொதுக்கூட்டத்தில் பிரதமர் இந்திரா காந்தி, எதிர்க்கட்சிகளைச்சாடி ஒரு சொற்பொழிவாற்றினார். லஞ்ச ஊழல் பிரச்னைகளை எதிர்க்கட்சிகள் கையில் எடுத்துக் கொண்டு, நாட்டில் குழப்பம் ஏற்படுத்த முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டினார். ஏராளமாகப் பணமோசடி செய்ததாக ஏற்கெனவே வழக்கில் உள்ளவர்கள்தான் ஊழல் ஒழிப்பு இயக்கம் நடத்துகிறவர்களுக்கு பண உதவி செய்து வருவதாகவும் பிரதமர் குற்றம் சாட்டினார்.

எதிர்க்கட்சிகள் ஆட்சி பீடத் தலைவர்களின் ஊழல்களைப் பற்றியும், அரசாங்க அதிகாரிகளின் ஊழல்களைப் பற்றியும், எடுத்து அம்பலப்படுத்தினால்—அந்த ஊழல்களையெல்லாம் துடைத்தெறியவேண்டிய பொறுப்பினையுடைய பிரதம மந்திரி, மோசடி வழக்கில் உள்ளவர்களிடமிருந்து எதிர்க் கட்சிகள் பணம் வாங்குவதாகக் குற்றம் சாட்டுவது எதைக் காட்டுகிறது?

எதிர்க்கட்சிகள் மீது குற்றத்தைச் சுமத்தி சொந்தக் கட்சி மந்திரிகளின் ஊழல்களையும், தனது அரசாங்க அதிகாரிகளின் ஊழல்களையும் பூசி மெழுகுவதை அல்லவா காட்டுகிறது?

மோசடிக்காரர்கள் எதிர்க்கட்சிகளுக்குப் பணம் கொடுத்தாலும் எந்த அளவுக்கு கொடுத்துவிட முடியும்? லைசென்ஸ்கள் பெற வேண்டுமானால்—கோட்டாக்கள் பெற வேண்டுமானால்—பெர்மிட்டுகள் பெறவேண்டுமானால்—காண்ட்ராக்ட் எடுக்கவேண்டுமானால்—பண்டங்களின் விலைகளையும், தானியங்களின் விலைகளையும் ஏற்றிக்கொள்ள வேண்டுமானால்—வரி திமிக்கி விட வேண்டுமானால் - வரி பாக்கிப்போடவேண்டுமானால்—கடன் பெற வேண்டுமானால்—பண்டங்களைப் பதுக்க வேண்டுமானால்—கள்ள மார்க்கெட் நடத்தவேண்டுமானால்—கலப்படம் செய்ய வேண்டுமானால்—கள்ள நோட்டு அடிக்கவேண்டுமானால்—கடத்தல் நடத்த வேண்டுமானால்—சட்டங்களையும் சர்க்காரின் கொள்கைகளையும் தமது சுரண்டலுக்கு அனுகூலமாக வளைக்க வேண்டுமானால்—பட்ஜெட் வெளியாவதற்கு முன்னாலேயே இரகசியங்களைத் தெரிந்து, பதுக்கல், ஒதுக்கல், விலை ஏற்றல் முதலியனவற்றைச் செய்யவேண்டுமானால்—அரசு நிலங்களையும், ஏழைகளின் நிலங்களையும் அமுக்கவேண்டுமானால்—கோயில் சொத்துக்களிலும் கூட்டுறவு சங்கங்களிலும் பாய வேண்டுமானால்—உழைக்கும் மக்களின் உரிமைப் போராட்டங்களை ஒடுக்க போலீஸ் பாதுகாப்புத் தேடவேண்டுமானால்—இன்னும் இதுபோன்ற எத்தனையோ சொத்துச் சேர்க்கும் சுயநல காரியங்களைச் சாதிக்கவேண்டுமானால்—இங்குள்ள முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் எதிர்க்கட்சிகளையா பிடிக்கிறார்கள்? அல்ல.

ஆளும் கட்சியின் கவர்னர்களையும், பிரதமரையும், மத்திய மந்திரிகளையும், மாநில முதலமைச்சர்களையும் இதர அமைச்சர்களையும், எம். பி, எம் எல் ஏ, ஆளும் கட்சிகளின் ஸ்தாபனத் தலைவர்கள் ஆகியவர்களைத்தானே பிடிக்கிறார்கள்! ஏனென்றால், அவர்களிடம்தானே அரசு இயந்திரமும் அரசாங்க கஜானாவும், அதிகாரமும் இருக்கிறது!

இவ்வாறு ஆளும் கட்சித் தலைவர்களுக்கு லஞ்சம் கொடுப்பதோடன்றி, அரசாங்க நிர்வாகத்தை நடத்தும் அதிகாரிகளுக்கும் லஞ்சம் கொடுத்து காரியத்தைச் சாதித்துக்கொள்ளுகிறார்கள் நிலப்பிரபுக்களும், முதலாளிகளும் பெரு வியாபாரிகளும்.

இதுதான் ஊழல்களுக்கெல்லாம் அடிப்படை, இதுதான் ஊழல்களிலெல்லாம் முதற்பெரும் ஊழல். இதுதான் நாட்டு மக்களைப் பட்டினி போடுகிறது.

இதைப்பற்றிக்கண்டனம் எழும்போது, சுண்டைக்காயைச் சுட்டிக்காட்டி, பூசணிக்காயை மறைக்க முயல்கிறார் இந்திரா காந்தி. தன் கண்ணிலுள்ள கட்டையை எடுப்பதற்குப் பதில், மாற்றார் கண்ணிலுள்ள தூசியைத் துளாவுகிறார் இந்திரா காந்தி.

எனது சர்க்காரைப் போல் யாருமே லஞ்ச ஊழலை எதிர்த்துபோரிட்டி நக்க முடியாது என்றும் பீத்திக்கொள்ளுகிறார். இவரும் இவரது சர்க்காரும் போரிட்ட லட்சணம் எப்படி என்று யாவரும் அறிவர். நகர்வாலா எப்படிச்செத்தான்? துப்புத் துலக்கச் சென்ற போலீஸ் அதிகாரி காசிப் ஏன் மாண்டார்? மாருதி கார் பாக்டரிக்கு பணம் சேர்த்த விதமும் நிலம் பெற்ற தினுசும் எப்படி? பாராளுமன்றத்தை நாறடிக்க பாண்டிச்சேரி லைசென்ஸ் ஊழல் என்ன? எல். என். மிஸ்ரா செய்த ஊழல்களுக்கு எண்ணிக்கை உண்டா? புலனாய்வு அறிக்கையை ஊராருக்கு தெரியாதபடி பொத்திக் கொண்டது ஏன்? மாநிலந்தோறும் அதிகாரப்பங்கீட்டுக்கு அடிதடி நடப்பது, ஆதாயப் பங்கீட்டுக்கு அல்லவ!

மற்றும், தொழில் வளர்ச்சிக்கும், விவசாயவளர்ச்சிக்கும் ஏராளமாக பணம் செலவழித்து வருவதாகவும், தொழிலாளர், விவசாயிகள் நலனில்தான் தனது சர்க்கார அதிக அக்கறை செலுத்தி வருவதாகவும், குறை கூறுவோரெல்லாம் குழப்பவாதிகளென்றும் பிரதமர் பேசியிருக்கிறார்.

அவரது அரசு தொழில்களை வளர்த்த லட்சணம் டாட்டா பிர்லாக்களை வளர்த்தது. அன்னிய முதலாளிகளுக்கு கதவைத் திறந்து விட்டது. தொழிலாளர் நலனில் கொண்டிருக்கும் அக்கறை அவர்களைப் பட்டினிச் சம்பளத்திலும், ஊதிய முடக்கத்திலும்தான் விட்டது.

விவசாயத்தை வளர்க்க லட்சணம், நிலப்பிரபுக்களைக் கொழுக்க வைத்திருக்கிறது. பற்றாக்குறையையும். பதுக்கலையும் தானிய விலை ஏற்றத்தையும் உண்டாக்கிவிட்டிருக்கிறது. நடைமுறையில் சாகுபடி செய்கின்ற விவசாயத் தொழிலாளர்களைப் பட்டினிச் சாவுக்கும். நித்திய தரித்திரத்துக்கும் இரையாக்கி விட்டிருக்கிறது.

இறுதியில் விலைவாசி உயர்வைப் பற்றிக் குறிப்பிடுகையில், உலக நாடுகளில் ஏறியுள்ள விலையுடன் ஒப்பிட்டால் இந்திய ஒருநாட்டில்தான் விலைவாசி உயரவில்லை என்று பிரதமர் கூறுகிறார். இதெல்லாம் என்ன கதை? படிதாண்டிப்போன பாவைபர் பல நாடுகளிலும் இருக்கலாம். அதைப்பற்றி நமக்கென்ன பேச்சு? அது மட்டுமா உலகம்? விலைவாசி உயராத, பணவீக்கம் இல்லாத சோசலிஸ்டு நாடுகளை ஏன் ஒப்பிட்டுக் காட்டக் கூடாது? இனம் இனத்தோடுதானே சேருகிறது!

இந்திய காங்கிரஸ் அரசாங்கத்தின் முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ ஆதரவுக்கொள்கையையும் நடைமுறையும் ஒழிக்காவிட்டால் இந்த நாடு குட்டிச் சுவராகத்தான் போகும்.

சங்ககிரி சிமெண்ட் போராட்டத்தில்

பெண்களின் தீரம்

போலீசின் மிரட்டலுக்கு ஆணித்தரமான பதில்

சங்ககிரி, டிச 31—

25 சத போனஸ் கோரி 51 தினங்களுக்கு மேலாக வேலை நிறுத்தம் செய்து வரும் சங்ககிரி சிமெண்ட் தொழிலாளர்கள்—போராட்டத்தின் ஒரு கட்டமாக—மறியலிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை 1090 பேர் சிறையில் வாடுகின்றனர்.

கடந்த 26-ந் தேதியன்று போராட்டத்தை உடைக்கும் நோக்கத்துடன், ஆலைக்கு வரும் நிலக்கரியை ஆலைக்குள் கொண்டு போக முயன்றதைத் தடுத்து மறியல் செய்த போராட்டக் குழு தலைவர் பி ஆர் நாராயணன் தலைமையில் சி ஐ டி யூ உதவித் தலைவர் பி மணி உட்பட 25 பேர்—போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

பெண்களின் தீரம்

சிமெண்ட் ஆலை நிர்வாகம், பிரச்னைக்குத் தீர்வு காண விரும்பாது, தொழிலாளர்களை தொடர்ந்து போராட்டத்தில் தள்ளி வருவதை எதிர்த்து மாதர் சங்க கன்வீனர் அன்னம்மா சாமுவேல் தலைமையில் திரண்டெழுந்த தாய்மார்களையும் கைது செய்து போலீஸ் வேனில், ஏற்றி ஸ்டேசனுக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு, நீங்கள் இனி மேல் தொழிலாளர்கள் போராட்டத்தில் கலந்து கொள்ள மாட்டோம் என்று எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும் — இல்லாவிட்டால் விளைவு கடுமையாக இருக்கும் என்றும் போலீஸ் அதிகாரிகள் அச்சுறுத்தி மிரட்டியுள்ளனர்.

ஆனால், அங்கு மிரட்டலுக்கு அஞ்சாத பெண்கள், "இது எங்களது உரிமை. நீங்கள் மிரட்ட வேண்டாம். சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று ஆணித்தரமாகக் கூறிவிடவே, மாலை 7 மணியளவில் அனைத்துப் பெண்களையும் விடுதலை செய்து விட்டனர்.

ஊர்வலத்தில் வந்தவர்களும் கைது

26-ந் தேதி சேலம் கலெக்டர் அலுவலகம் முன்பு நடந்த மறியலில் 5 பேர் கைதாயினர். அந்த மறியலுக்கு முன்னதாக நடந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டதற்காக, சி ஐ டி யூ உதவிச் செயலாளர் ஜானகிராமன், சேலம் மாக்னிசைட் தொழிலாளர்கள் (சி ஐ டி யூ), சேலம் கூட்டுறவு மில் தொழிலாளர்கள் (ஐ என் டி யூ சி) உட்பட 15 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். ஆனால் இதரதொழிலாளர்களின் கடுமையான எதிர்ப்புக்குப் பின் மாலையில் விடுதலை செய்தனர்.

சிமெண்ட் தொழிலாளர் மத்தியில் கே ரமணி

சங்ககிரி, டிச 31—

போராட்டக் களத்தில் இருக்கும் தாழையூத்து சிமெண்ட் தொழிலாளர்களை கடந்த 19-ந் தேதியும் சங்ககிரி சிமெண்ட் தொழிலாளர்களை 28-ந் தேதியும் சந்தித்து, தமிழக சி ஐ டி யூ தலைவர் தோழர் கே ரமணி உற்சாகமூட்டி வாழ்த்துத் தெரிவித்தார். 28-ந் தேதி சங்ககிரியில் சிமெண்ட் ஆலை எதிரில் நடந்த போராட்டப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசும்போது கூறியதாவது:—

நட்டம் என்றும், பணம் இல்லையென்றும் முதலாளிகள் சொல்வது ஏமாற்று வேலையாகும். பணமில்லை என்று கூறுபவர்கள், போராட்டத்தை உடைக்க கைக்கூலி கொடுத்து ஆட்களைப் பிடிக்கவும், பொய்ப் பிரச்சாரம் செய்யவும், நிலக்கரி கொண்டு வரவும், வாரி வாரி பணத்தை இறைக்கின்றனரே எப்படி? எங்கிருந்து இந்தப் பணம் வந்தது?

தி மு க அரசுக்கு கோரிக்கை

இப்படியெல்லாம் செய்யும் இந்த முதலாளிகள் உழைத்து உழைத்துக் கொடுத்த தொழிலாளி போனஸ் கேட்டால் மட்டும் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் நட்டம் என்கிறார்கள். இந்த முதலாளிக்கு தி மு க அரசு துணை போக வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர் போராட்டத்தில் அரசு தலையிட்டு சமரசம் கண்டது போல் சிமெண்ட் தொழிலாளர் பிரச்னையில் தலையிட்டு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும். நாள் நீடிக்கிறதே என்று கருதாமல், தொழிலாளர்கள் அனைவரும் ஒற்றுமையாக தொடர்ந்து போராடினால் நிச்சயம் வெற்றி நமக்கே.

குமரி மாவட்ட தொழிற் சங்க மாநாடு

நாகர்கோவில். டிச. 30—

வருகிற ஜனவரி 5-ந் தேதியன்று, இங்கு ஊதிய முடக்க எதிர்ப்பு அனைத்துச் சங்க மாநாடு நடக்கிறது.

இந்த மாநாட்டில் என் ஜி ஓ-க்கள் மற்றும் எல் ஐ சி வங்கி ஊழியர்களும்; ஆசிரியர்களும தொழிலாளர்களும் பங்கு பெறுவர்.

பி. ராமமூர்த்தி

இந்திய தொழிற் சங்க மையத்தின் (சி ஐ டி யூ) பொதுச் செயலாளர் தோழர் பி ராமமூர்த்தி மற்றும் பல் வேறு கட்சி, தொழிற் சங்க தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவர்.

'ஸ்பாட் பில்லிங்' முறை எதிர்ப்பு கருத்தரங்கு

மதுரை, டிச.30—

மின்வாரியத்தில் புகுத்தப்பட்டுள்ள 'ஸ்பாட் பில்லிங்' என்ற ஸ்தலப் பட்டியல் முறையை எதிர்த்து, மதுரை, முகவை மின் திட்டத்தில் கருத்தரங்குகள் நடந்தன.

மத்திய அலுவலகம் முன் எஸ் மல்லிகார்ச்சுனன் தலைமையில் மத்திய அமைப்புச் செயலாளர் து ஜானகிராமன், ஊழியர் சங்க பொதுச் செயலாளர் ஜி ஜி சுந்தரம்; மற்றும் கே வாசுதேவன் (சி ஐ டி யூ] சுப்ரமண்யம் (தேசியசங்கம்) ஆர் எஸ் கேசவன் (ஜெனரல் இன்சூரன்ஸ்] ஏ அப்துல் வகாப ஆகியோர் பேசினர்.

மேலூரில் எஸ் அருணாசலம்தலைமையில் து ஜானகிராமன் ஜி ஜி சுந்தரம், வி. மாரியப்பதேவர் [சம்மேளனம்) ராமச்சந்திரன் (முன்னேற்ற சங்கம்) ஆகியோரும் விருதுநகரில எம் மீனாட்சி சுந்தரம் தலைமையில் து ஜானகிராமன் பி அழகர், ஆகியோரும்—

திண்டுக்கல், செம்பட்டி ஆகி இடங்களில் இ எஸ் சுந்தரம், ஆறுமுகத்தாண்டவன், எம் மீனாட்சி சுந்தரம், து ஜானகிராமன் ஆகியோரும் 'ஸ்பாட் பில்லிங்' முறையினால் ஏற்படும் அபாயங்களை விளக்கிப் பேசினார்கள்.

சிந்தனையாளர் மன்றம் வளருகிறது

சேலம், டிச. 31—

சேலம் மாவட்டம் நாமக்கல் பகுதியில் தொடர்ந்து பல கிராமங்களில் முற்போக்குச் சிந்தனையாளர் மன்றங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

காளப்பநாயக்கன்பட்டி

காளப்பநாயக்கன் பட்டியில் அமைக்கப்பட்டமன்றத்துக்கு சமதர்மச் செல்வன் (தலைவர்) கொங்கு நாடன் (துணைத்தலைவர் பாலகிருஷ்ணன் (செயலர்), பச்சையப்பன் (துணைச்செயலர்) உள்பட 14 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது,

பனைமரத்துப்பட்டி

செவிந்திரப்பட்டி கிராமம் பனைமரத்துப் பட்டியில் இராமராதாகிருஷ்ணன் தலைமையில் நடந்த கூட்டத்தில் அமைகப் பட்டமன்றத்துக்கு வி, பெருமாள் (தலைவர்) எம். தங்கவேல் (துணைத்தலைவர்), எஸ். முருகேசன் (செயலர்), எம். பழனியாண்டி (துணைச் செயலர்) உட்பட 10 பேர் கொண்ட குழு அமைக்கப் பட்டது.

இவ்விருகூட்டங்களிலும் தோழர் நாமக்கல் சுப்பிரமண்யம் கலந்துகொண்டு மன்ற நோக்கங்களை விளக்கினார்.

மாணவர், தொழிலாளர் தலைவர்கள் மீது

போலீஸ் வெறித்தாக்குதல்

அருமனை, டிச. 30—

இங்குள்ள போலீஸ் தலைமைக் காவலர் பரமானந்தம் என்பவர் இந்திய மாணவர் சங்க ஊழியர் ஆர் சுந்தரேசன், தொழிற் சங்க ஊழியர்களும், தோட்டத் தொழிலாளர்களுமான அர்ஜுனன், சுகுமாரன்போன்ற 8 தோழர்களை போலீஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்று கடுமையாகத் தாக்கினாராம்.

தோட்ட முதலாளிக்கும் தொழிலாளர்களுக்கு மிடையேயான போராட்டத்தில் முதலாளிக்கு ஆதரவாக இந்த தாக்குதல் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் போலீசார்.

போலீசாரின் இந்த அக்கிரமத்தைக் கண்டித்து அருமனையில் 28-ந் தேதி கோபாவேசமிக்கஊர்வலமும் பின்னர் பொதுக்கூட்டமும் நடந்தது. தோழர்கள் பி திவாகரன், ஜெஹேமச்சந்திரன், கே மோகனச்சந்திரன், ஏ எஸ் கிருஷ்ணன்குட்டி பி நடராஜன் ஆகியோர் பேசினர்.

போலீஸ் சர்க்கிள் ஆபீஸ் முன் கண்டன ஆர்ப்பாட்டம்

இரணியல், டிச. 31—

குமரி மாவட்டத்தில், இரணியல் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரின் அக்கிரமங்களை எதிர்த்து சர்க்கிள் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் விவசாயிகள் சங்கம் சார்பில் நடந்தது. முன்னதாக ஊர்வலம் பரசேரி "விவசாயிகள் சங்கத்திலிருந்து புறப்பட்டது.

பிலாவறக் கோணத்தைச் சேர்ந்த பட்டா விவசாயிகளுக்கு பாதகமாக நடந்து கொண்டதையும், நிலச்சுவான்தார்களுக்கு ஆதரவாக போலீசை அனுப்பியதைக் கண்டித்தும் — இந்த போலீஸ் நிலையத்துக்கு விவசாயிகள், பொது மக்கள் சென்றால் பகிரங்கமாக லஞ்சம் கேட்கப்படுவதைக் கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இறுதியில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் பி மாதவன்பிள்ளை, எம் ஓ சுந்தர், பி திவாகரன் ஆகியோர் பேசினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தமிழ் மாநிலக் குழு சார்பில் தீக்கதிர் அச்சகத்தில் (6/16 பைபாஸ் ரோடு, மதுரை, 625018) அச்சிட்டு வெளியிடுபவர் ஆசிரியர் கே. முத்தையா

பொதுப்பணி தொழிலாளர்கள் தர்ணா-மறியல்

பொள்ளாச்சி, டிச. 31—

கடந்த 27ந் தேதிமுதல் சோலையார் நகரில் நிர்வாகப் பொறிஞர் அலுவலகம், பொள்ளாச்சியில உள்ள திட்ட தலைமை பொறிஞர் அலுவலகம் முன்பும் மற்றும் பழனி, பாலாறு, பரப்பலாறு கோட்ட அலுவலகங்கள் முன்பு பொதுப்பணித் தொழிலாளர்கள் தர்ணா, மறியல் போன்ற போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

பரம்பிக்குளம் —ஆழியார் திட்டத்தில், மூன்று முதல் 15 ஆண்டுகள் வரை சர்வீஸ் உள்ள 126 தொழிலாளர்களை கடந்த 7ந்தேதி முதல் தலைமைப் பொறிஞர் வேலைநீக்கம் செய்துள்ள அக்கிரமத்தை எதிர்த்து இந்தப் போராட்டம் நடந்து வருகிறது.

வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு வேலை தரக் கோரி தலைமை பொறிஞர் (பொது) உத்தரவிட்டிருந்தும், இது சம்பந்தமாக பொதுப்பணித்துறை அரசு செயலாளர் தந்தி மூலம் அறிவித்திருந்தும், சோலையார் நகருக்கு மாநில கவர்னர் வந்தபோது, வேலை தருவதாக ஒப்புக் கொண்டிருந்தும், பரம்பிக்குளம்—ஆழியார் திட்ட தலைமைப் பொறிஞர் இதுவரை தொழிலாளர்களுக்கு வேலை தர மறுத்து வருகிறார்.

திமுக பொதுக்குழுவுக்கு ஆசிரியர்களிடம் கட்டாய வசூலா?

வாடிப்பட்டி, டிச. 29—

அண்மையில் மதுரையில் நடந்த திமுக பொதுக்குழு, செயற் குழுக் கூட்டங்களுக்கு, வாடிப்பட்டி ஒன்றிய ஆசிரியர்களிடம் கட்டாயமாக நிதி வசூலிக்கப்பட்டதாம்.

அதுவும், நவம்பர் மாதத்திய சம்பளத்தில் நன்கொடைச் சீட்டுகளையும் வழங்கி சம்பளத்தில் கட்டாயமாகப் பிடித்தம் செய்யப்பட்டதாம்.

இவ்வாறு கட்டாயமாக பிடித்தம் செய்ததற்கு வட்டார ஆசிரியர் கூட்டணி கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தது.

சிவசேனா தலைவரும் பிரதமரும் ரகசிய பேச்சு

பம்பாய், டிச. 30—

மகாராஷ்டிர மாநில பிரதேச வெறிககட்சியான சிவசேனாவின் தலைவர் பால்தாக்கரே பம்பாய் வந்திருந்த பிரதமரை ராஜ் பவனில் சந்தித்தார்

இவர்கள் இருவரும் பேச்சு வார்த்தை நடத்திய போது வேறு யாரும் அனுமதிக்கப்படவில்லை. இந்த ரகசியப் பேச்சு வார்த்தை 20 நிமிடம் நீடித்தது.

பால்தாக்கரே பிரதமரிடம் "மண்ணின் மைந்தர்களுக்கே" வேலைவாய்ப்பு போன்ற தனது கொள்கைகளையும மகாராஷ்டிர மாநிலப் பிரச்னைகளையும் விவரித்தாராம்.

பிரதமர் இந்திராகாந்தி அவரது பேச்சை பொறுமையுடன் கேட்டாராம்.

பிரதமர் இந்திராகாந்தி வந்தபோது இடதுசாரி எதிர்க்கட்சிகளும், தொழிற் சங்கங்களும், மாதர் இயக்கமும் பிரதமர் இந்திரா காந்திக்கு கறுப்புக் கொ[illegible] காட்டி ஆர்ப்பாட்[illegible] செய்தபோது [illegible] சேனா பங்[illegible]

தமிழ்நாடு சிமெண்டில்

இதுவரை 600 பேர் கைது

போராட்டம் மேலும் தொடர்கிறது

ஆலங்குளம், டிச, 31—

15—12—74ந் தேதி முதல் போராடும் தமிழ்நாடு சிமிண்ட்தொழிலாளர்களின் உறுதியை உடைப்பதில் தோற்றுப் போன நிர்வாகம் ரௌடித்தனத்தில் இறங்கியுள்ளது.

தி. மு. ச. பேரவை தலைமையில் உள்ள ஒரு சில கருங்காலிகளைக் கொண்டுவேலைநிறுத்தத்தை உடைத்து விடலாம் எனக் கனவுகண்ட நிர்வாகம் இன்று ரௌடிகளைக் கொண்டும், போலீசைக் கொண்டும் தொழிலாளர்களை வீடுவீடாகச்சென்று மிரட்டும் மிகக் கேவலமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

வீட்டிற்கு தீ வைப்போம், காலை ஒடிப்போம், கையை முறிப்போம்என ரௌடிகள் தொழிலாளர்களின் குடும்பத்தினரை மிரட்டுகின்றனர். முன்னணி தொழிலாளர்கள் மீது பொய் கேசுகளையும் போட்டுப் பார்க்கின்றனர். ஜாதி துவேசங்களையும் கிளப்பி விட்டுப்பார்க்கின்றனர்.

சில கருங்காலி தொழிலாளர்களைக் கொண்டும், பலவந்தமாக தூக்கிக் கொண்டு செல்லப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டும் யந்திரங்களை ஓட்டியதில் அவைகள் பழுதடைந்து பெருத்த சேதமடைந்துள்ளன.

கருங்காலித் தொழிலாளர்களுக்கும், திமுக அரசின் போலீசாருக்கும், ரௌடிகளுக்கும் சாப்பாட்டுக்கும் ஏனைய செலவுகளுக்கும், ஆள் பிடிக்கும் வேலைகளுக்கு 24மணி நேரமும் ஜீப்புகள் பறந்து கொண்டிருப்பதாலும் ஆகும் பெட்ரோல் செலவுகளுக்கும் அரசுத் துறையைச் சேர்ந்த இந்த ஆலையின் பணம் நாள்தோறும் ஆயிரக்கணக்கில் தாரை வார்க்கப் படுகிறது.

பேச்சு வார்த்தைக்கு முன் வராமல் அரசுத் துறையைச் சேர்ந்த இந்த சிமெண்ட ஆலை நிர்வாகம் தனியார்துறை முதலாளிகளை நல்லவர்களாக காட்டும் வகையில் மிகக்கேவலமாக நடந்து கொள்கிறது.

20 சத போனஸ், மருத்துவ வசதி, மருத்துவ விடுப்பு போன்ற நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும்தொழிலாளர்களை மிரட்டி பணிய வைத்து விடலாம் என பகல் கனவு காண்கிறது நிர்வாகம்.

தொழிலாளர்கள் உறுதியுடன் போராடுகின்றனர். கொடுமைகளை எதிர்த்து உரிமைகளை பாதுகாப்பது, பெறுவது என்பதில் தொழிலாளர்கள் உறுதி பூண்டுள்ளனர்.

29-12-74 முதல் மறியல் போராட்டம் துவங்கியுள்ளது.

29, 30 தேதிகளில் 301 தொழிலாளர்கள் உரிமைக்காக மறியல் செய்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆண்டின் கடைசி நாளான இன்று 300 பேர் கைதாகியுள்ளனர். மொத்தம் 600 பேர் கைதாகியுள்ளனர்.

பெண்களும் போராட்டத்தில்

பெண்களும் மறியலில் குதிக்க தயாராகின்றனர். தொழிலாளர்களின் நியாயமான போராட்டத்திற்கு சுற்றுப்புற விவசாய மக்களும் ஏனையோரும் போராடும் தொழிலாளி வர்க்கத்திற்கு ஆதரவும் உதவியும் அளித்து வருகின்றனர்.

இப் போராட்டம் சி. ஐ. டி. யு., அ. தி. மு. க., தி. மு. ஊ ச. (மலைராஜன் தலைமை) ஆகிய சங்கங்களின தலைமையில் நடைபெறுகிறது.

இத்தாலியில் பாசிஸ்ட்களின் ரௌடித்தனம்

ரோம், டிச. 31—

பாடுயா என்றபாசிஸ்ட் ஸ்தாபனத்தின் தலைவரான பிராங்கோப்ரெடோவைவிடுதலை செய்யவேண்டும்; பிளாக் ஆர்டர் என்ற பிறபோக்கு ஸ்தாபனத்துக்கு 8 லட்சத்து 27 ஆயிரம் (66 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய்) கொடுக்கவேண்டும் இல்லையேல் 9 நாட்களுக்கு ஒரு இத்தாலியனை கொலை செய்யப்போவதாக அந்நாட்டின் பிளாக் ஆர்டர் என்ற பிற்போக்கு ஸ்தாபனம் இத்தாலி அரசுக்கு அறிவித்துள்ளது.

பிளாக் ஆர்டர் வெளியிட்ட அறிக்கையில் பிராங்கோப்ரெடோ சிலிநாட்டிற்கேனும் அல்லது லிபியாவிற்கேனும் செல்லவிருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளது. பிராங்கோ 69ம் ஆண்டில் இத்தாலியநாட்டிலுள்ள மிலான் பேங்கில் குண்டு வீசி 15பேர மரணமடையவும 80 பேர் படுகாயமடையவும், காரணமானவர் அந்த வழக்கில 1972ல் சிறைத் தண்டனை பெற்றவர்.

போராட்ட வெற்றிக்கு பின் விவசாயிகள் சங்கம் அமைப்பு

செங்கற்பட்டு, டிச. 30—

செங்கற்பட்டு தாலுகா விட்டிலாபுரம் காலனியைச் சேர்ந்த விவசாயத் தொழிலாளர்கள், ஜாதிக கொடுமையை எதிர்த்து விவசாயிகள் சங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் வழிகாட்டலின் கீழ் 13 நாள் வேலைநிறுத்தம செய்து வெற்றி பெற்றனா.

அந்த வெற்றிக்குப்பின் விவசாயிகள் சங்கததிறப்பு விழா கடந்த 15-ந் தேதி சின்னப்பன் தலைமையில் நடந்தது.

தோழர்கள் சி.கே.மாணிக்கம். சி. ராதாகிருஷ்ணன் லோகநாதன், செல்வதுரை மற்றும் பல தோழர்கள் பேசினர்.

விவசாயிகள்சங்ககிளைக்கு மாரிமுத்து தலைவர், சின்னப்[illegible] உதவிததலைவ[illegible] [illegible] செயலர். [illegible] செயுலர், [illegible]

வேலைநிறுத்த உரிமையே போராடி பெற்றது

பெங்களூர், டிச. 30—

தொழிலாளர்கள் வேலைநிறுத்த உரிமையை காப்பதற்கு அனைத்து பலமும் பயன்படுத்தப்படும் என அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் செயல் கமிட்டி அறிவித்துள்ளது.

ரயில்வே தொழிலா[illegible] கள் தங்கள் வேலைநிறு[illegible] உரிமையை கைவி[illegible] தான் அவர்கள் பி[illegible] மீது பேச்சு வார்த்[illegible] தொடங்க முடியும் [illegible] திய அமை[illegible] அரசியல் [illegible] அறிவித் [illegible] அதற்கு [illegible] அக்கமிட்[illegible] வாறு ப[illegible]